**கஹவத்த பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கஹவத்த பிரதேச சபையின் 202 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் கஹவத்த பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 3,298,821 ஆன அபிவிருத்தி கருத்திட்ட செலவுகளை மூலதனமாக்காததன் காரணமாக காணியும் கட்டிட கணக்கின் மற்றும் மூலதனத்திலிருந்து வருமானத்திற்கு பங்களிப்பு கணக்கின் மீதிகள் அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டன. | 2021 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | அபிவிருத்தி கருத்திட்ட செலவுகள் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஏலவிற்பனை செய்யப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 5,244,973 ஆன நிலையான சொத்துக்களின் கிரயத்தை கணக்குகளிலிருந்து அகற்றாததால் நடைமுறையால்லாத சொத்துக்கள் அப் பெறுமதியால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | 2021 கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | அகற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி பேரேட்டுக் கணக்குளிலிருந்து அகற்றப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் காணி ஏல விற்பனை ஒன்றினால் பெற்றுக் கொண்ட ரூபா 4,312,500 பெறுமதியான காணியை கணக்கீடு செய்யாததால் காணியும் | 2021 கணக்குகளை தயாரிக்கும் போது சரிசெய்வதாக. | பெற்றுக் கொண்ட நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடங்களும் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தால் பங்களிக்கும் கணக்கு மீதி அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தன. | | செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாணற்குரிய வேலைகள், வியாபார வரி பில்லிடல் ரூபா 72,410 குறைவாக கணக்கீடு செய்த காரணத்தால் மிகை அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2021 கணக்குகளை தயாரிக்கும் போது சரிசெய்வதாக. | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | கொரோனா நோய் தடுப்பிற்கு கிடைத்த காசான ரூபா 100,000 இனை மீளாய்வாண்டு வருமானமாக இணக்கஞ் செய்யாது திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கியதன் காரணமாக திரண்ட நிதியம் அப் பெறுமானத்தால் கூடுதலாக மற்றும் ஆண்டின் மிகை அப் பெறுமானத்தால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | 2021 கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதாக. | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 1,978,222 ஆன 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படவில்லை. | இது தொடர்பான தகவல்களை கண்டறிய முடியாதுள்ளதாக. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ள தேவையான சான்றுகளை சமர்பிக்க வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371(2)இ | 2011 முதல் 2020 வரையான காலத்தினுள் 04 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த கூட்டுத் தொகை ரூபா 1,086,991 ஆன முற்பணத்தை தீர்த்திருக்கவில்லை. | 2021 ஏப்ரல் 16 திகதி வரை முற்பணம் தீர்க்கப்படவில்லை என. | முற்பணத்தை குறித்த விடயம் முடிவடைந்தவுடன் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 8,016,690 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 4,222,608 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் 1340 வீதவரி அலகுகளிற்குரிய ரூபா 1,353,985 நிலுவையொன்று காணப்பட்டதுடன், அந்நிலுவை மீதியை அறவிட நடவைடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீண்ட காலமாக நிலுவையாக உள்ள இனங்காண முடியாத சில வீதவரி ஆதனங்களின் வீதவரி நிலுவையை ஏடுகளிலிருந்து பதிவழிக்க ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்பியுள்ளதாகவும், நிலவும் தொற்று நிலமையினை கவனத்திற் கொண்டு இவ்வாண்டு ஆதனத் தடைவிதிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் 151 ஏக்கர் வரி அலகுகளிலிருந்து அறவிட வேண்டியதாக நிலவிய ஏக்கர் வரி மீதி ரூபா 68,886 இனை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை ஏக்கர் வரியை அறவிட குறித்த ஆதன உரிமையாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதுடன் ஏக்கர் வரி ஒப்பாய்வு மூலம் இனங்கண்ட பிரிக்கப்பட்ட காணிகளை பதிவேடுகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| | ஆண்டு 01 மற்றும் 03 காலமாக நிலுவைாயகவுள்ள சபைக்கு சொந்தமான இலக்கம் 41 மற்றும் இலக்கம் 42 கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 108,410 இனை மீளாய்வாண்டு இறுதிவரை அறவிட்டிருக்கவில்லை. | பணம் செலுத்தாத கடையறைகளை சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கைகளை திட்டமிட்டுள்ளதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | **நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**<br>மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2020 செப்டம்பர் முதல் திசெம்பர் வரை அறவிட வேண்டிய முத்திரை கட்டண பெறுமதி ரூபா 4,303,100 அறவிடப்படவில்லை. | 2019 இறுதி அரையாண்டின் மற்றும் 2020 ஆண்டின் அட்டவணைகள் கிடைக்காததால் முத்திரைக் கட்டண பெறுமதியை இனங்காண முடியாதுள்ளதாக. | ஆண்டிற்காக அறிவிட வேண்டிய வருமானத்தை இனங்கண்டு அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | என்தான நகர அபிவிருத்தி உத்தேச திட்டத்திற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவிற்கு சொந்தமான 10 ஏக்கர் அளவான காணியை கஹவத்த அபிவிருத்தி சபை உப அலுவலகத்திற்கு 1985 திசெம்பர் 05 திகதி உடமையை ஒப்படைத்திருந்த போதும், சபையினால் அதன் உரிமையை எழுத்து மூலம் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. தற்போது அக் காணியின் 07 ஏக்கர் அளவான காணியை வெளித்தரப்பினர் சுவீகரித்திருந்ததுடன், எஞ்சியுள்ள 03 ஏக்கர் காணியையேனும் சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இக் காணிப் பகுதியை காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவினால் உரிதியொன்றின் மூலம் சபைக்கு ஒப்படைக்காமை மற்றும் அவர்களால் அடிக்கடி வேறு நபர்களுக்கு புதிய உருதி வழங்கியதால் தற்போது எந்தான நகரின் அபிவிருத்தி நடவடிக்கையை மேற்கொள்வது கடினமாகியுள்ளதாக. | சபைக்குரிய காணியை சபைக்கு சுவீகரிக்க நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 12 திகதிய சபை தீர்மான இலக்கம் 7.35 ஊடாக வழங்கியிருந்த அங்கீகாரத்தின் மீது 2020 ஆண்டிற்காக 268 தினப் குறிப்பேடுகளை பிரசுறிக்க ரூபா 140,900 செலவிடப்பட்டிருந்தது. | தினக் குறிப்பேடு தவிசாளர், சபை அங்கத்தவத்தவர்கள், செயலாளர், சபையின் ஆளணி மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் வங்கிகளிற்காக வழங்கியுள்ளதாக. | சபை நிதியத்தை பிரதேச சபை சட்டம் 132 பிரிவின் பிரகாரம் பயன்படுத்த வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சபை அதிகார எல்லையில் மீளாய்வாண்டினுள் 840 மெட்கிக் டொன் அளவான திண்மக் கழிவுகளை வெளியிட ரூபா 10,263,475 ஆன கிரயம், 15 ஆளணி ஊழியர்களும் 02 வாகனங்கள் மற்றும் இயந்தி உபகரணங்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அக் கழிவுகளை வெளியிடல் ஒழுங்கான மற்றும் சுற்றாடல் நேய முறையிற்கு மாற்றமாக நிலத்தில் குழிகள் வெட்டி அதனுள் கழிவுகளையிட்டு குழிகள் மூடப்பட்டிருந்தன் மூலம் பல சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. | காணியை சுவீகரிக்க கோரிக்கை விடுக்கப்பட்ட போதும், காணியை சுவீகரிக்க இயலுமை கிடைக்கவில்லை. அதன் காரணமாக திண்மக் கழிவு முகாமை திட்டத்தை தயாரித்து அங்கீகாரம் பெற்றுள்ள போதும், அதனை செயற்படுத்த இயலாதுள்ளதாக. | சபை அதிகார எல்லையில் கழிவு முகாமை திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்த வேண்டும். |